சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **247 / 2021**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **21.01.2025** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : ஆனந்தகுமார் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் முதுநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக எங்களது மருத்துவமனையில் இருந்து எனக்கு கொடுத்த அனுமதி கடிதம் சா.சா.ஆ.1. எங்களது மருத்துவமனையில் கலைசெல்வி என்பவர் 28.05.2018ம் தேதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் அன்றில் இருந்து 09.06.2018ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அவருக்கு எங்களது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்படி கலைசெல்வி மீண்டும் 06.02.2019ம் தேதி சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 11.09.2019ம் தேதி வரை சிகிச்சை பெற்றுள்ளார். அவர் 28.05.2018 முதல் 09.06.2018 வரை மருத்துவமனையில் இருந்ததற்காகவும் அவருக்கு சிகிச்சை மேற்கொண்டதற்காக விடுவிப்பு சான்றிதழ் சா.சா.ஆ.2. 06.02.2019 முதல் 11.02.2019 வரை மருத்துவமனையில் இருந்ததற்காகவும் அவருக்கு சிகிச்சை மேற்கொண்டதற்காக விடுவிப்பு சான்றிதழ் சா.சா.ஆ.3. அவருக்கு எங்களது மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட காய சான்றிதழ் சா.சா.ஆ.4. மேற்படி கலைசெல்வி எங்களது மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டதற்கான பில்கள் (வரிசை 5) சா.சா.ஆ.5. (சா.சா.ஆ.2 முதல் 5 வரையிலான ஆவணங்கள் அனைத்து அசல் ஆவணங்கள் இல்லை என்பதாலும் அசல் ஆவணங்களை ஏற்கனவே மேற்படி கலைசெல்விக்கு கொடுத்திருப்பதாலும் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

காயம்பட்ட நபர் சிகிச்சை பெற்று செல்லும் சமயத்தில் அதற்கான முழு பில்களையும் கொடுத்துவிடப்படும் என்று சொன்னால் சரிதான். மேற்படி காயம்பட்ட நபருக்கு ஒவ்வொரு தலைப்புகளின் கீழும் எவ்வளவு தொகை மருத்துவமனைக்கு செலுத்தப்பட்டுள்ளது

என்கின்ற விவரத்தோடு காயம்பட்ட நபருக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறே இவ்வழக்கில் காயம்பட்ட கலைசெல்விக்கும் வழங்கப்பட்டுள்ளது. அந்த விவரம் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் 09.06.2018ம் தேதியிட்ட ஆவணமானது எங்களது மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டது தான். மேற்படி 09.06.2018ம் தேதியிட்ட ஆவணமானது எ.ம.சா.ஆ.1. மேற்படி எ.ம.சா.ஆ-1 ஆவணத்தில் ரூ.52,000/- என இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள பில்களின் மொத்த தொகையும் என்னிடம் காண்பிக்கப்படும எ.ம.சா.ஆ.1ல் காண்பிக்கப்படும் தொகையும் ஒன்று தான். மேற்படி ரூ. 52,000/- தொகையை இரண்டு முறை குறிப்பிட்டிருப்பதால் அதனை ஒருமுறையாக தான் கருதப்படும். மேற்படி ஆவணத்தில் 07.10.2017ம் தேதியிட்ட ரூ. 52,000/- செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தட்டச்சு பிழையாக இருக்கலாம். மேற்படி தொகையான அறுவைசிகிச்சைக்குரிய தொகை தான். காயம்பட்ட கலைசெல்வி 28.05.2018ம் தேதி தான் சிகிச்சைக்காக வந்தார். மேற்படி தனிநபர் இழப்பீடு பெறுவதற்காக மேற்படி பில்களை வாங்கிசெல்வார்கள். அதை வைத்து இழப்பீடு பெற்றுக்கொள்ளலாம் என்றால் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு இழப்பீடு பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் அசல் விடுவிப்பு சான்று, மருத்துவபில்கள் அனைத்தையும் உரிய நிறுவனத்திடம் ஒப்படைத்துவிடுவார்கள். காயம்பட்ட கலைசெல்வி அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு அசல் பில்களை கொண்டு இழப்பீடு பெற்றுவிட்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.